அ.வ.எண். 135/2019 நாள்: 06.02.2026

வா.சா.1 திருமதி. மும்தாஜ்பேகம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுடைய இடம் 24 செண்ட் நான்கெல்லைப்படி எங்களுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 01.03.2010–ல் கிரையம் வாங்கினேன். கலியமூர்த்தி, ரமேஷ் ஆகியோரிடமிருந்து 24 செண்ட் வாங்கினேன். நான் வாங்கிய கொஞ்ச காலத்தில் 1, 2 பிரதிவாதிகள் 3ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் எனக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை. எனது பட்டா எண் என்ன என்றால் மறந்துவிட்டது. கூட்டு பட்டாவா தனிப்பட்டாவா என்றால் கூட்டுப்பட்டா ஆகும்.

4) எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் "தாவா சொத்து வருவாய் கணக்குகளில் நன்செய் என குறிப்பிட்டிருந்தாலும், தாவா சொத்தும் அதனை சுற்றியுள்ள பகுதிகளும் பாசன வசதி இல்லாததால் வீட்டு மனைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் "இந்த தாவா சொத்து வண்டிப்பாதைக்கு அடுத்த தென்புறம் உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை, வண்டிப்பாதையும் இல்லை. எனது இடத்திற்கு தென்புறம் யார் உள்ளார் என்றால் ஜெகநாதன் சொத்து உள்ளது. அதற்கடுத்த தென்புறம் யார் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5) 2ஆம் பிரதிவாதி முருகையன் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு கிழக்கே பிரதிவாதிகளின் பாதைக்காக 3 அடி அகல பொதுப்பாதை உள்ளது என எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 அடி அகல பாதை தவிர வேறுபாதை இல்லை என்றால் சரியல்ல, வேறுபாதை உள்ளது. வேறுபாதை உள்ளது என எனது முதல்விசாரணையில் கூறவில்லை என்றால் ஆமாம். பொதுபாதையை கூடுதலாக இடம் வேண்டும் என்று பிரதிவாதிகள் எப்போது என்னிடம் கேட்டார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2019–ல் கேட்டார்கள், அதுவரை அந்த 3 அடி பாதையைதான் பயன்படுத்தி வந்தார்கள்.

6) ஊரில்லாத சமயம் பிரதிவாதிகள் வேலியை அகற்றினார்கள் கூறியுள்ளேன் எந்த ஊருக்கு சென்றிருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு வேலியை பிரித்தது எனக்கு எப்போ தெரியும் என்றால் 2 நாட்கள் கழித்து தெரியும். யார் யார் பெயரில் புகார் கொடுத்தேன் என்றால் பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தேன். மேற்படி புகார் மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல்நிலையம் சென்றதாக எனக்கு ஞாபகம் இல்லை. வேலியை பிரித்துவிட்டதால் எனது இடத்தை மீட்டுக் கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனது இடத்திற்கு நான்குபுறமும் யார் உள்ளார்கள் என்றால் வடக்கில் ரஞ்சிதம், தெற்கே ஜெகநாதன், மேற்கே புள்ளமங்கை கோவில் இடம், கிழக்கே முருகையன் இடம் இருந்தது, அதை மாதாகோவிலில் விற்றுவிட்டார்.

7) எனது வழக்கில் வரைபடம் தாக்கல் செய்துள்ளனா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்குரை மாதிரி வரைபடத்தில் வண்டிப்பாதையை வடக்குப் பக்கம் எல்லையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது இடத்திற்கு கிழக்கு பக்கமும் பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வேறுவழியில் செல்லலாம் என்பதை வழக்குரை மாதிரி வரைபடத்தில் சுட்டி காட்டவில்லை என்றால் சரிதான். எனது வழக்கில் சொத்துவிபரம் நான்கெல்லையில் புள்ளமங்கை நன்செய்க்கு கிழக்கு, முருகானந்தம் நன்செய்க்கு மேற்கு, ரஞ்சிதம் கிரையம் பெற்றுள்ள நன்செய்க்கும் தெற்கு, ஜெகநாதன் நன்செய்க்கு வடக்கு என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான்கெல்லையில் 3 மற்றும் 20 அடி பாதைகள் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

8) ரஞ்சிதம் என்பவர் ஜெகநாதனிடம் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசினாவிற்கும், எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ள போது எதற்காக அவரை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சந்தேகத்தின் பேரில் அவரை சேர்த்துள்ளேன். நான் கிரையம் வாங்கும் காலத்தில் தாவா சொத்து நன்செய்யாக இருந்தது 3 ஆம் பிரதிவாதி 01.08.2007 தேதியிலேயே 24 செண்ட் நிலத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்த ரமேஷ் மற்றும கலியமூர்த்திக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் இந்த உண்மையை மறைத்து எதிர்வழக்குரையை 3 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார் என்று எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளது சரியா என்றால் தவறு நான் அவ்வாறு கூறவில்லை.

9) தற்போது வரை அந்த இடம் தரிசாகதான் உள்ளது என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் "நான் கிரையம் பெற்றுள்ள 24 செண்டில் 6 செண்டை ஷேக் அப்துல்லா என்பவருக்கு ரூ.50,000/–க்கு கிரையம் செய்து கொடுக்க 17.02.2017 தேதியில் ஒரு கிரையம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன் மேற்படி ஷேக் அப்துல்லா முழு கிரைய தொகையை கொடுத்துவிட்டாலும், ஊரக நகரமைப்பு நிர்வாகத்தால் ஒப்புதல் அளிக்காததால் என்னால் கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க முடியவில்லை" என்று கூறியுள்ளது சரியா என்றால் தவறு நான் அவ்வாறு கூறவில்லை. தற்போதுவரை எனக்குரிய 24 செண்ட் இடத்தில் ஷேக் அப்துல்லாவிற்கு கொடுத்த 6 செண்ட் உட்பட 24 செண்ட எனது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளது என்று எனது முதல்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

10) 1, 2 பிரதிவாதிகள் மற்றும் நான் வாங்கிய சொத்து ஆகியன 3ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். முருகையன் 19.05.2010–ல் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அதேபோல் அசினாபேகமும் 28.04.2010–ல் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் ஜூலி என்பவர் 18.09.2013–ல் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் நான் கிரையம பெற்ற பிறகு காலிமனையாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றாலும், நான் நன்செய் ஆக கிரையம் பெற்றதாக தவறுதலாக பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஜெகநாதன் என்பவர் 01.08.2007 அன்று வயலாக கிரையம் செய்து கொடுத்ததை நான்கெல்லையை மாற்றாமல் நான் கிரையம் செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

11) மேற்படி ஜெகநாதன், மனைகளாக பிரித்து 1, 2 பிரதிவாதிகள் மற்றும் சிலருக்கும் கிரையம செய்து கொடுக்கும்போது காலிமனையாகதான் கிரையம் செய்து கொடுத்துள்ளார் அப்போது, அந்த 3 அடி பாதை என்பது 20 அடி பாதையாக ஒதுக்கீடு செய்துதான் மனைபிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது, அதனை மறைத்து நான் முருகானந்தம் கொடுத்த பத்திரத்திலுள்ள நான்கெல்லையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நான்கெல்லையை மறைத்து 20 அடிபாதையை 3 அடி பாதையாக மாற்றி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை மாதிரி வரைபட நான்கெல்லைக்கும், வழக்குரை சொத்துவிபர நான்கெல்லைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

12) எனது வழக்குரை மாதிரி வரைபடத்தில் நான்தான் முதலில் உள்ளேன் பிரதிவாதிகள் இடம் எனக்கு பின்னால்தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளை செல்லவிடாமல் நான்தான் மறித்து பிரச்சனை செய்து வேலி அமைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அவர்களது வீட்டிற்கு செல்லவிடாமல் நான் தடுத்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பாதை கொடுக்கவில்லை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார்கள். நான்கெல்லைப்படி எனக்கு எனது இடம் வேண்டும். நான்தான் பிரதிவாதிகளை இடையூறு செய்துவிட்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Mumthaj Begam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.06 17:22:12 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU